**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 42/2024**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 10.07.2025.**

| | |
|---|---|
| Name : Vasu | Caste : |
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

(Accused present. )

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் கட்டிநாயக்கன்பட்டியில் குடியிருந்து கார்பெண்டராக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரி எங்கள் ஊரைச் சேர்ந்தவர் தான். கடந்த 02.07.2023ம் தேதி நான் ஊருக்கு வந்த போது எதிரி எம்.ஜி.ஆர் என்கிற அய்யந்துரை ரூ.3000/- பணம் கேட்டார். என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று கூறினேன். நீ பணம் கொடுக்காமல் இருந்துவிடுவாயா என்று எதிரி கூறினார். பின்னர் 06.07.2023ம் தேதி கட்டிநாயக்கன்பட்டி மைக்செட் கட்டும் இடத்தில் நான் இருந்த போது எதிரி அங்கு வந்து பணம் கொடுக்காமல் இருந்துவிடுவாயா தெவிடியா பையா என்று திட்டி தகராறு செய்தார். அருகிலிருந்தவர்கள் எங்களை தடுத்து அனுப்பி வைத்தார்கள்.

2) பின்னர் கட்டிநாயக்கன்பட்டி பேருந்து நிறுத்தத்தில் அன்றையதினம் மாலை 5.15 மணியளவில் நான் இருந்த பொழுது தெவிடியா பையா பணம் கொடுக்கமாட்டாயா என்று கெட்ட வார்த்தையால் திட்டி நெஞ்சின் மீது கையை வைத்து அடித்து கீழே தள்ளினார். கீழே கிடந்த கட்டையை எடுத்து என் வாயின் மீது அடித்துவிட்டார். என்னுடைய மேல் தாடையில் 1 பல் கீழே விழுந்துவிட்டது. மற்றொரு பல் சேதமாகிவிட்டது.

3) கீழ் தாடையில் ஒரு பல் சேதமாகிவிட்டது. எனக்கு மேல் உதடு, கீழ் உதடு, நெற்றி ஆகிய இடங்களில் ரத்த காயம் ஏற்பட்டது. அருகிலிருந்த பூபதி, சசி, விஜய், கண்ணன் ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டு என்னுடைய மாமா அர்த்தனாரி மேட்டூர் அரசு மருத்துவமனையில் என்னை சிகிச்சைக்காக சேர்த்தார். சிகிச்சையிலிருந்த போது போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார். புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். என்னிடம் காட்டப்படும் திறந்த நீதிமன்றத்திலுள்ள கட்டையால் தான் எதிரி என்னை தாக்கியதாக சாட்சி அடையாளம் காட்டினார். கட்டை **சா.பொ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>** இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.